
# கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்



வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்

வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் / புதுக்கவிதை/ வேலணையூர் ரஜிந்தன்(பாலசுந்தரம் ரஜிந்தன்), 4 ம் வட்டாரம், வேலணைகிழக்கு, வேலணை/ முதற் பதிப்பு: ஐப்பசி 2019 / © திருமதி ரஜிந்தன் மனோரஞ்சிதம் /வெளியீடு: நூலாசிரியர்/ பக்கம்: xiv + 82/ விலை:300.00/அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி

தொடர்பு: 0777704055
மின்னஞ்சல் : brajinthan@gmail.com
முகநூல் : வேலணையூர் ரஜிந்தன்

Kattida Kaadum Ureniak kathirum/ collection of Poems/ Velaniyoor Rajinthan(Balasuntharam Rajinthan, Ward No. 04, Velanai East, Veanai / First Edition : October 2019/ © Mrs Rajinthan Manoranjitham/ Published by author/ Pages:xiv + 82/ Price 300.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN : 978-955-71331-2-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஒற்றை உடன் பிறப்பு
தம்பி சஜந்தனுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

உதயன்

தினக்குரல்

மெட்ரோ NEWS

தினகரன்

ஜீவநதி

சக்தி FM

கவிதைப் பெட்டகம்

விஜயகுமார் கவிதா

பஞ்சலிங்கம் கோகுலன்

முருகேசு யோகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


வரம் வேண்டும்/ 01

குமரிக் கண்டம் ஆண்ட அரசு/ 03

கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்/ 04

ஆறாம் விரல்/ 06

எழுத்துக்களால் ஆயுதம் செய்வோம் / 08

நேசித்திருங்கள்/ 10

அன்பாலோர் பூமி செய்வோம்/ 12

விழிகள் பேசும் மௌன மொழி/ 13

அதிசய அழகே/ 15

அது ஒரு குளிகை நேரம்/ 17

புன்னகையில் தொலைந்தேன்/ 19

மொழியே நமது இருப்பு/ 20

அவர்கள் என்னைத் தேடக்கூடும்/ 22

தமிழ் என்னைத் தவிக்க விட்டதில்லை/ 24

கற்பனையில் வாழ்வியல்/ 26

வாழ்வின் வல்லமை/ 28

தீமை சுட்டெரித்த தீ/ 30

திசை மாறிய ஓடங்கள்/ 32

ஆறாத ரணங்கள்/ 33

வேலி/35

ஏமாற்றங்களின் நீட்சி/ 38

மரணித்துப் போன மனிதம்/ 40

யாசகம்/ 42

விடுபடுதல்/ 44

தாய் நாடு/ 46





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் என்பவர் யார்/ 47
புதுக்கவிதை/ 48
கனக்கும் இதயம்/ 50
கையூட்டு/ 52
தொழிலாளி/ 53
இடராக வேண்டாம் வரமாக வா/ 54
என்னோடு சிறகு விரித்திடு/ 56
காற்று வெளி/ 57
தர்மத்தின் தேவனே/ 58
வரைவேன் உலகினை / 59
முள் தைத்த மலர்/ 60
நிறம் மாறும் மனிதர்கள்/ 61
வாய்ஜாலம்/ 62
காதல் வேடிக்கை/ 63
பட்டிக் காட்டில் ஓர் பைங்கிளி/ 64
செயலாய் நான்/ 66
என்னை நான் தேடுகிறேன்/ 68
எந்தன் கனவு/ 70
ஆனந்த மழை/ 72
காற்றூதும் நீர்க்குழாய்கள் / 74
அப்பாவின் மிதிவண்டி / 76
வரம் தரும் மரங்கள்/ 77
கனவுதிர் காலம்/ 78
ஒரு நாழிகையின் கதறல்/ 80
மீள் பிரசவம்/ 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## இவருக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு

பழந்தமிழ்க் கவிதை அகம், புறம் என்ற இரு பெரும் பிரிவுகளுள் அடங்கும். சங்க கால சமூகம் ஓர் பூர்வீக சமூக மாயிருந்தபடியால் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியமும் எளிமையாய் இருந்தது.

மூவேந்தரிடையோ குறுநில மன்னர்களிடையோ நடந்த போர் பிராந்தியப் போர். இருபதாம் நூற்றாண்டு கண்ட போர்கள் உலகப் போர்கள் பேரழிவையும் இடப்பெயர்ச்சிகளையும் ஏற்படுத்தியவை. இன்று நிலைமை மேலும் மோசமாகி "புலப்பெயர்ச்சி" ஒரு பூதாகாரப் பிரச்சினையாகி உலகை அச்சுறுத்துகிறது.

நவீன வாழ்க்கை பல முன்னேற்றங்களைக் கண்டுள்ள போதும், சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளதைக் காண்கிறோம். சமூக உணர்வு, ஒட்டுறவு, சேவை மனப்பான்மை என்பன குறைந்து மனிதர்கள் தனித் தீவுகளாக வாழ்கின்றனர். இச்சூழ்நிலையில் எழும் இலக்கியம் இச்சிக்கலின் பன்முகத் தன்மையை பிரதிபலிக்கவே செய்யும்.

வேலணையூர் ரஜிந்தனுடைய கவிதையும் இப் பன்முகத் தன்மைக்கு உதாரணமாகிறது

"கற்பனையில் வாழ்வியல்" என்ற கவிதை கிராமத்து அழகைக் காட்சிப் படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சை நிறப் போர்வைக்குள்
படுத்துறங்கும் வயல்வெளி
பறவைகள் வதிவிடமாய்
நிழல் பரப்பும் ஆலமரம்
முண்டாசு கட்டியபடி
உணவு படைக்கும் கடவுளர்
சலங்கைகள் ஒலியெழுப்ப
அசைந்து வரும் மாட்டுவண்டி... "

என தாம் தொலைத்துவிட்ட கிராமத்து வாழ்வியலைச் சித்தரிக்கிறார் கவிஞர்.

போர் நமது வாழ்வைப் புரட்டிப் போட்ட அனுபவங்களை சொல்லாத ஈழத்துக் கவிஞர்கள் யார்? ரஜிந்தன் அந்த அவலத்தை வீழ்ச்சியை ஆவணப்படுத்தியுள்ளார்!

"சாம்பலைப் போர்த்தியிருக்கிறது
தீயில் வெந்து நொந்த தேசம்...
நஞ்சுண்ட காட்டு வழி
நடுநிசிப் பயணமாய்
நகர்கிறது வாழ்வு !
காலங்கள் பல கடந்தும்
ஆறாத ரணங்கள் !"

இவை நாம் சந்தித்த பேரவலத்தின் சோக சித்தரிப்பு.

போருக்கஞ்சிப் புலம்பெயர்வதால் துன்பதுயரங்களுக்கு முடிவு வருகிறதோ என்றால், அதுதானில்லை ○

"முகமறியா மனிதர்கள்
செவியறியாப் புது மொழிகள்
உறவுகளைத் தவறவிட்டு
உருக்குலையும் உணர்வுகள்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலையில் கணவனும்
மாலையில் மனைவியும்
ஆளையாள் முகம்பார்க்கா
அவசரகதி வேலைகள்!"

அக்கரைப்பச்சையால் கவரப்படாமல் சொந்த மண்ணை விட்டுப் போகாமல் கொள்கைப் பற்றோடு இருந் தோருடைய நிலை என்ன ? வீதியிலும் பெருந்தெருவிலும் பதாகைகளை ஏந்தி நாவறளக் கோஷமிடுவதில் வாணாள் கழிகிறது.

"நீ நம்பிக் கொண்டுதான் இருக்கிறாய்
கடவுளை அல்ல
தீர்வு தீர்வு என்று காலம் கடத்தும்
ஏமாற்று அரசியல் நாடகத்தையும்
நல்லாட்சி என்ற மாய பிம்பத்தையும்!"

ரஜிந்தனுடைய கவிதைகளில் உச்சந் தொடுபவை அவருடைய காதல் கவிதைகள்

"என் அண்ட சராசரங்களும்
உந்தன் சிறு புன்னகைக்குள்
எப்போதும் அடங்கியிருக்கும்!"

"என் பொழுதுகளை
நீட்சியடையச் செய்திருக்கிறது
உன்னோடான இச் சிறுதருணம்!"

என்றும்

"கால் முளைத்த கங்கை ஒன்று
கை வீசி நடந்து வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தில் காட்டாறு

கரை புரண்டு ஓடக்கண்டேன்”

என்றும் ரஜிந்தன் யாத்துள்ள கவிதைகள் புதிய படிமங்கள், கற்பனைகள் பொதிந்தவை.

ஐந்தடி நிலவொன்று பூமியில் நடந்து வருவதாகவும் மழைக்காலப் பயணத்தில் அவள் குடையாகக்கூட வருவதாகவும் கவிஞர் சொல்வது சுவை பயப்பது.

கவிஞர்கள் எல்லோரும் லட்சிய வாதிகளாக இருப்பர்.

“ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்

ஒருமை யுளராக உலகியல் நடத்த வேண்டும்”

எனக் கூவி அழைப்பர். இதற்கு ரஜிந்தன் விதிவிலக்கல்ல.

பகைமைகள் உதிர்ந்த காட்டில்

நட்புப் பயிரை விதைக்கவும்

போர்க்கால வானம் வெளிக்க,

அன்பு மழை பொழிய வேண்டும்

எனப் பிரார்த்திக்கவும் செய்கிறார்.

அன்பாலோர் பூமி செய்ய வாரீர்

என உலகத்தாரைக் கூவி அழைக்கிறார்.

மிக இளம் வயதிலேயே இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ள ரஜிந்தன் இப்பொழுது தமது மூன்றாவது தொகுதியாகிய “கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்” எனும் கவிநூலைத் தமிழ் வாசகர்களுக்குத் தருகிறார்.

இவருக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

– கவிஞர் சோ.பத்மநாதன் –

“ ஏகம் ”

பொற்பதி, கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## ஒரு படைப்பாளியாய் நீ கொண்டாடப்பட வேண்டியவன்

ரஜிந்தனும் நானும் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு பயிற்சி முகாமில் சந்தித்துக்கொள்கின்றோம். அப்போது சிறுகதைகள், சிறுவர்கதைகள் எனப் பல கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. முடிவில் "அண்ணா! எனக்கு இது சரிப்பட்டு வராது. கவிதைதான் சரி" என்று புறப்பட்டு . . .

இன்று "கட்டடக் காடும் யுரேனியக் கதிரும்" எனும் மூன்றாவது கவிதை நூல் வரைக்கும் வந்திருக்கின்றான்.

மிகுந்த மகிழ்ச்சி. கொத்தனார் அடுக்கும் கல்லுக்கும் ஒரு கவிஞன் தொடுக்கும் சொல்லுக்கும் எடுக்கும் சிரத்தை ஒரே அளவானதுதான்.

கட்டப்படுகின்ற வீடு காற்று, மழை முதலான பலப் பிரயோகங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாக அத்திவாரமும் சுவரும் கூரையும் யன்னலும் கதவும் அமைந்தால் அது வாழக் கூடிய வீடு.

கோர்க்கப்படுகின்ற சொற்களும் அகமும் புறமும் சார்ந்து கனவுகளை மாத்திரம் புனையாமல், கட்டிடக்காடுகளின் இடுக்குகளில் விரவிக்கிடக்கின்ற வியர்வையினதும் கண்ணீரினதும் சுவையையும் சுகத்தையும் தேடி வார்க்க வேண்டும். அவை ஊமைக்காயங்களின் மௌனக்கசிவுகள். அதற்கான சிரத்தையும் எடுக்கும் பட்சத்தில் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் வாசிக்கப்படுவதாய் அமையும்.

மற்றது

ஓயாது எழுதுகின்ற ஆர்வம், அனைத்தையும் அதிகமதிகமாய் எழுதி முடித்துவிடத் துடிக்கும் துடிப்பு, முதலாக எழுத முனைகின்ற அனைவர்க்கும் நல்லதோர் முன்மாதிரி. அப்பண்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது.

ரஜிந்தன்...

நூல்கள் ஒவ்வொன்றும் உணர்ச்சிப் பெருக்கில் முழாங்கித் திரியும் சந்திகள் அல்ல. அவை அர்த்தமுள்ள ஆத்மாக்களின் அந்தரங்க விசாரணைகள். அவை காலங் களைக் கடந்து வாழ்ந்துக்கொண்டிருக்கும் ஆவணங்கள். காலத்தை வாசிக்க எத்தனிக்கும் எவரும் உன்னைக் கடந்தே வரத்தக்கதாக உன் படைப்புக்களை வைத்திரு.

ஒரு படைப்பாளியாய் நீ கொண்டாடப்பட வேண்டி யவன். அதில் ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால், வாசிப்பு ஆழமற்றவர்களின் முகஸ்துதிகளிலும் போலி வார்த்தைகளிலும் மயக்கம் கொள்ளாதிருத்தலும் நன்று.

சமரசமற்ற இலக்கிய சம்பாசனைகளுக்கு உன் கவிதைகளை உட்படுத்து.

உலக இலக்கியங்களுக்குள் காணாமற் போ.

நீ யாசிக்கின்ற அனைத்தையும் தமிழ் உனக்குத் தரும்.

சோதரா...

நலமும் பலமும் நல்ல குருவும் வாய்க்கக் கூறும் வாழ்த்துக்களோடு
உன் கவிதைகளை வரவேற்கக் காத்திருக்கும்...

சோதரன்

– சே.இராஜேந்திரன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## கவியுலகில் வளர்ந்து வரும் இளங்கலைஞர்

நவீன இலக்கிய உலகின் கவிதைப் பரப்பிலே வளர்ந்து வரும் இளங்கலைஞர்களில் திரு பா. ரஜிந்தன் முதன்மை யானவர். இதுவரை இவரது படைப்புகள் கவிதை நூல்களாக வெளிவந்துள்ளன. அக்கவிதை நூல்களான பொற்கனவு, நிலா நாழிகை ஆகிய தொகுப்புக்களைத் தொடர்ந்து மூன்றாவது படைப்பாக "கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்" என்கின்ற கவிதைத் தொகுதி வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

"கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்" கவிதை நூலானது தமிழ் மொழியின் அருமை பெருமைகளைப் பறைசாற்றுவ தோடு சமூகம் மற்றும் அகம் சார் விடயங்களையும், புலம் பெயர்வின் உணர்வலைகளையும் தாங்கியதாக அமையப் பெற்றிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இத்துறையில் சிறந்து விளங்கி மேன்மேலும் பல நூல் களை வெளியிடவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இக்கவிதை நூல் சிறந்து விளங்க இறையாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– திரு. அம்பலவாணர் சோதிநாதன் –
பிரதேச செயலர்,
வேலணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**தமிழின் முத்துக்களைத் தரிசனம் செய்யுங்கள்**

தன் சமூகத்தின் மேல் அக்கறை கொண்டு இலக்கியத்திற்குள் பொற்கனவு, நிலா நாழிகை என்கின்ற கன்னிக் கவிதை நூல்களுடன் அறிமுகமாகிய வேலணையூர் ரஜிந்தன் தனது மூன்றாவது படைப்பாக" கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்" எனும் கவிதை நூலை வாசகர்களுக்குத் தருகிறார்.

தொடர்ச்சியாகப் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, இணையம், முகநூல் போன்ற பல்வேறு தளங்களில் கவிதைகளூடாகப் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் இவ் இளங்கலைஞன் தனது இக்கவிதை நூலினூடாக தமிழினதும், சமூகத்தினதும் அகம் புறம் சார்ந்த பல்வேறு பக்கங்களை மிகவும் லாபகமாக சுவைபடச் செதுக்கியதுடன் தமிழின் முத்துக்களை வரிகளுக்குள் பதிப்பித்திருக்கிறார்.

பெரும் இலக்கிய சமுத்திரத்திற்குள் பயணித்துக் கொண்டிருக்கும் வேலணையூர் ரஜிந்தன் எதிர்காலத்தில் மேலும் பல படைப்புகளைத் தமிழ் உலகிற்கு வழங்க வேண்டும் என்று மனமகிழ்வோடு வாழ்த்தி வரவேற்கின்றேன்.

– திரு பா. ஜெயதாசன் –
கலாசார உத்தியோகத்தர்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## என் எழுத்துகளுக்கு உயிரூட்டும் உறவுகளுக்கு வணக்கம்!

அழகாலும் அதிசயத்தாலும் ஆச்சரியத்தாலும் சூழ்ந்திருக்கும் இவ்வுலகு மனிதனின் அறிவியல் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு பரிணாமத்தை இன்று எட்டியிருக்கிறது.

அவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை மிக்க பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட தமிழ்க் கவிதையும் பல்வேறு பரிணாமங்களைக் கடந்து இன்று நவீன வடிவங்களில் வாசகர்களின் மனங்களை அதிகமாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. இவ்வுலகினை சாதாரண மனிதர்கள் பார்க்கின்ற பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதே கவிஞர்களின் பார்வை. அதனூடாக பல்வேறு பட்ட உயரிய சிந்தனைகளையும் வரலாற்றுப் பதிவுகளையும் புரட்சிமிகு எழுத்தாணி முனையில் செவ்வனே பதிவு செய்து விடுகின்றார்கள் கவிஞர்கள்.

இவ்வகையிலே எழுத்தாணி முனையில் பயணப் பட்டிருக்கும் எனது பயணத்தில் பொற்கனவு, நிலா நாழிகை ஆகிய கவிநூல்களைத் தொடர்ந்து மூன்றாவது கவிதைத் தொகுப்பாக "கட்டிடக்காடும் யுரேனியக்கதிரும்" எனும் படைப்பு வெளிவருகிறது.

கடந்த கால அனுபவங்கள், நிகழ்காலப் படிப்பினைகள் எதிர்கால எதிர்வுகூறல்கள் என்ற அடிப்படையில் என் சிந்தனையில் உதித்த முத்துக்களைப் பத்திரப்படுத்திக் கவிதை மாலை கோர்த்திருக்கின்றேன்.

அவ்வாறே என் கவிப்பயணத்தில்...

துணை நிற்கும் அத்தனை அன்பு உறவுகளையும் பணிந்தவனாக, எனது முதலிரு படைப்பிற்கும் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதரவைப் போன்று இப்படைப்பிற்கும் வாசகர்களாகிய உங்களிடத்தில் மிகுந்த ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

மேலும் இக்கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்கிய கவிஞர் திரு சோ. பத்மநாதன் ஐயா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியவர்களான வேலணைப் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான திரு அம்பலவாணர் சோதிநாதன் அவர்களுக்கும், வேலணைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திரு பாலசிங்கம் ஜெயதாசன் அவர்களுக்கும் எழுத்தாளர் திரு சே.இராஜேந்திரன் அண்ணா அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றிகளைத் தெருவிக்கும் அதே வேளை,

நூலின் அட்டைப்படத்தினை கருத்துள்ளதாயும், உயிர்ப் புள்ளதாயும் வரைந்து வழங்கிய சகோதரி பிருந்தாயினி பிரபாகரன் அவர்களுக்கும், நூல் வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு ஆகியவற்றை அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைத்த எழுத்தாளர், ஜீவநதி, கடல் சஞ்சிகைகளின் ஆசிரியர், வெளி யீட்டாளர், உளவள ஆலோசகர் எனப் பன்முக ஆளுமையாளர் க.பரணீதரன் அண்ணனுக்கும் மேலான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இக்கவிதை நூலிற்கான வெளியீட்டு இணை அனுசரணை வழங்கியதோடு அட்டைக் குறிப்பையும் எழுதியிருக்கும் தமிழ் விருட்சம் அமைப்பாளர், இதழ் இலத்திரனியல் ஊடக இயக்குநர் திருமதி அனுசுயா ஆனந்தரூபன் அவர்களுக்கும், கவிதை நூலின் வெளியீட்டுக்காக ஒரு பகுதி நிதிப்பங்களிப்பை இணைத்துக் கொண்ட வேலணைப் பிரதேச கலாசாரத் திணைக்களத் திற்கும் இதயத்து நன்றிகளை உரித்தாக்கி நிறைகின்றேன்.

என் மூச்சும் வாய்ப் பேச்சும் கவி வீச்சும்<br>
தமிழையே உயர்வாய்ப் போற்றும் - என்றும்<br>
தரணியில் தமிழைப் பறை சாற்றும்!

– வேலணையூர் ரஜிந்தன் –<br>
(பாலசுந்தரம் ரஜிந்தன்)<br>
ஆசிரியர், யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் வேண்டும்

குவளையில் கொஞ்சம்
தமிழை ஊற்றுங்கள் - எந்தன்
தாகம் தீரப் பருக வேண்டும்!

அறுசுவை விருந்தெனத்
தமிழை அள்ளி - பசிதீர
உண்டு நான் திளைக்க வேண்டும்!

செந்தமிழ்க் காற்றே
மூச்சுக் காற்றாய் - எந்தன்
சுவாசப்பையை நிரப்ப வேண்டும்!

பைந்தமிழ் நூற்று
ஆடை நெய்து - எந்தன்
உள்ளம் பூரிக்க அணிய வேண்டும்!

மகுடமாகச் சங்கத்தமிழை
சிந்தை மகிழ்ந்து - என்
சிரசில் ஏற்றிச் சுமக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளை நிலத்து நெல்மணி போல்
முப்பொழுதும் என் நாவில் - தமிழ்
நிறைவாய் விளைய வேண்டும்!

நடக்கின்ற சாலை எல்லாம்
தமிழ் மலர்ந்து மலர்ந்து - மணம்
பரப்பிடல் வேண்டும்!

இருள் குலைத்து ஒளி பரப்பும்
நிலவாகத் தீந்தமிழ் - என்றென்றும்
என் வாழ்வில் ஒளிர வேண்டும்! ●

- மெட்ரோ NEWS : 07.06.2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரிக் கண்டம் ஆண்ட அரசு

ஆதித் தமிழை நா உரைத்தால்
ஆயுள் முழுதும் மகிழ் விருக்கும்!
அமிர்தம் கூட தமிழ் சுவைக்க
ஆவல் கொண்டே தவித்திருக்கும்!

தேன் சுவையும் சுவை இழக்கும்
தீம் தமிழைச் சுவைத்தவர் நாவில்!
வான் பரப்பும் சிறிதாய்த் தோன்றும்
தமிழின் புகழை அறிந்தோர் வாழ்வில்!

உச்சம் ஒளிரும் கதிரவன் கூட
தமிழின் ஒளியில் அச்சம் கொள்வான்!
உலகப் பெருங்கடல் ஆழம் அற்பம்
அழகுத் தமிழை ஒப்பிட நேர்ந்தால்!

குமரிக் கண்டம் ஆண்ட அரசாய்
செம்மொழி என்ற மகுடம் சூடி!
அன்றும் இன்றும் என்றும் ஒளிரும்
பல்லாண்டு கடந்த இளமை மொழியே!

ஏட்டிற் தொடங்கி இணையம் வரையில்
எங்கும் எதிலும் உந்தன் பெயரே!
உலகம் போற்றும் உயரம் உனதே
உலக மொழியின் அன்னைத் தமிழே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்

விடியலைத் தொலைத்த
விழியோரம் வலிகள்!
வாழ்க்கையைத் தேடியே
புலம்பெயர் துயர்கள்!

கட்டிடக் காட்டிற்குள்
யுரேனியக் கதிர்கள்!
உயிரையும் உரிக்கிடும்
உறை பனிக் கட்டிகள்!

நிரந்தர வதிவிடம் பெற
நித்தம் ஒரு சட்டத்தரணி!
குடிவரவு குடியகல்வென்று
கெடுபிடி அதிகாரிகள்!

விசாலமான வீதிகளில்
ஊர்ந்தபடி வாகனங்கள்!
தொழிற்சாலை ஏப்பமிடும்
இரசாயன நச்சுக்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுக்காற்றை சுவாசித்தே
வீதிகளில் பயணங்கள்!
நகரமயம் ஆகிப்போன
இயந்திரகதி வாழ்வுகள்!

முகமறியா மனிதர்கள்
செவியறியாப் புதுமொழிகள்!
உறவுகளைத் தவறவிட்டு
உருக்குலையும் உணர்வுகள்!

காலையில் கணவனும்
மாலையில் மனைவியும்
ஆளையாள் முகம் பார்க்கா
அவசரகதி வேலைகள்!

பகட்டான வெளிநாடு
பொய்யான வெளித்தோற்றம்
நித்தமும் நிகழுதிங்கே
வாழ்வதற்காய் ஒரு போராட்டம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் விரல்

என் உள்ளத்து
ஊற்றுக்களின்
வடிகால்!

என் உணர்வுகளை
சிற்பமாக்கித்தரும்
கூரிய உளி!

உன்னதக் கனவுகளை
வார்த்தை வரிகளாக்கும்
கடின உழைப்பாளி!

அதற்கு அழுகை வரும்
சிரிப்பு வரும்
கோபம் வரும்
கொந்தளிப்பும் வரும்!

கவலைகளில்
பிதற்றவும் செய்யும்
மகிழ்ச்சியில்
ஆர்ப்பரித்தும் கொள்ளும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதிக்காய்
கிளர்ந்து எழும்
அன்புக்காய்
ஆதரவும் தரும்!

என் தனிமை போக்கும்
ஒற்றைக்கால் ஜீவன்!
என்னோடு விழித்திருக்கும்
உற்ற தோழன்!

என் சிந்தைகளை
வடிவம் செய்பவன்!
என் சிந்தனைகளை
வரியிற் சொல்பவன்!

எனக்காகத்
தன்னை இழந்தான்
எழுத்தாகி
நிலைத்து நின்றான்!

- தினகரன் 13.07.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துக்களால் ஆயுதம் செய்வோம்

தீமைகளைச் சுட்டெரிக்கும்
சூரியக் கதிர்களாய்
நாளைய விடியலை
நமது கரம் படைக்கட்டும்!

அநீதிக்குக் குரல் கொடுக்கும்
சத்திய வேட்கையாய்
புதிதாய் ஒரு அத்தியாயம்
சரித்திரத்தில் முளைக்கட்டும்!

கழுகென விழிகளை
அகலத் திறந்து வைத்து
நேர் கொண்ட பார்வையால்
வையத்தை அளந்திடுவோம்!

நெருப்பாய் எரியும்
உள்ளத்துச் சுவாலையை
எரிமலையாகத் திரட்டியே
கயவரை அழித்திடுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் மேன்மையும்
மனிதத்தின் புனிதமும்
காக்கின்ற சந்ததிக்காய்
புதுப்பாதை அமைத்திடுவோம்!

காலங்கள் நேரங்கள்
காத்திருக்கத் தேவையில்லை
பற்றுவோம் கரங்களில்
மாற்றத்தின் எழுதுகோலை!

புரட்சி ஒன்று வெடிக்கட்டும்
புதுமைப் பூங்கா மலரட்டும்
எழுத்துக்களே ஆயுதங்கள்
ஏந்திய கரம் விரையட்டும்!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசித்திருங்கள்

நேசம் துளிர்க்கும் போதே
இப் பிரபஞ்சத்தின் செழிப்பு
உறுதி செய்யப்படுகிறது!

நேசத்தை யாரும்
அவ்வளவு எளிதில்
விதைத்து விடுவதில்லை!

உதாசீனம் செய்யப்படும்
நேசத்தின் முன்மொழிவுகள்
துயரத்தின் தோற்றுவாய்கள்!

பொய்மை போர்த்திய
நேசிப்பின் ஏற்பாடுகள்
விபரீதக் குறியீடுகள்!
எனினும்
நேசிப்பே உயிர்களின்
உன்னத அடையாளம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அமைதியின்
ஒற்றை வார்த்தை அது!
வெறுப்பைக் குரோதத்தை
ஒழிக்கும் ஆத்ம சக்தி அது!

தோன்றத் தலைப்பட்ட யாவுமே
நேசிப்பின் தோற்றப்பாடுகள்!
ஒவ்வொரு ஆத்மாவும்
சூழலின் நேசிப்பின் வெளிப்பாடுகள்!

ஆகவே
யாவையும் நேசித்திருங்கள்
நேசித்துக்கொண்டேயிருங்கள்
நேசத்திற்கு முடிவே கிடையாது!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பாலோர் பூமி செய்வோம்

வேடங்களைக் களைந்துவிட்டு
பாசங்களை அணியுங்கள்

குரோதங்களை அழித்துவிட்டு
உள்ளன்பைப் பகிருங்கள்

உள்ளமதைத் தூய்மை செய்து
உண்மைதனை நிரப்புங்கள்

நீ பெரிது நான் பெரிது நீக்கி
ஒற்றுமையோடு கூடுங்கள்

பகைமைகள் உதிர்ந்த காட்டில்
நட்புப் பயிரை விதையுங்கள்

போர்க்கால வானம் கலைத்து
அன்பு மழைக்கு வேண்டுங்கள்

அன்பாலோர் பூமி செய்வோம்
அமைதிக்காகப் பிரார்த்தியுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிகள் பேசும் மௌன மொழி

மிக அருகிலே நீ
வெகு தொலைவிலே
என்னிடம் வார்த்தைகள்!

இதயத்தில் பூகம்பம்
இருந்தும் எனைச் சுற்றி
முற்றிலும் நிசப்தம்!

தடுமாற்றம் என்னுள்ளே
தவிக்கிறது என் இளமை
உன் முன்னே!

என் அண்ட சராசரங்களும்
உந்தன் சிறு புன்னகைக்குள்
எப்போதும் அடங்கியிருக்கும்!

என் பொழுதுகளை
நீட்சியடையச் செய்திருக்கிறது
உன்னோடான இச் சிறு தருணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையோ தவற விட்டதாய்
அங்குமிங்கும் அலைபாய்கிறது
இப்போது என் விழிகள்!

இது மட்டும் முதல் சந்திப்பல்ல,
இப்படிப் பல சந்திப்புகள்
வார்த்தைகள் பிரசவிக்காமலே
காதலோடு கடந்திருக்கிறது!

என்னிடம் வெறுமை மட்டுமே
வியாபித்திருக்கும் இந்த நொடியில்! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய அழகே

தேவதை நடந்து செல்லும் வீதி போல்
இவள் பூப்பாதம் பதிந்து போகும்
பாதையும் ஒளிரக் கண்டேன்

கால் முளைத்த கங்கை ஒன்று
கை வீசி நடந்து வர
நெஞ்சத்தில் காட்டாறு
கரை புரண்டு ஓடக் கண்டேன்

பௌர்ணமி நிலவொன்று
பெண்ணுருவில் நடை போட
பாவை இவள் புன்னகையில்
பூக்கள் எல்லாம் தோற்றுப்போக

பாதையோரச் செடிகளெல்லாம்
இவளைக் காணப் பூத்திருக்க
தோட்டத்து மலர்களெல்லாம்
இவள் கூந்தலேந்தத் தவமிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறடிப் பட்டாம் பூச்சியாய்
அழகு நிறை சிற்பமாய்
எழில் கொஞ்சும் ஓவியமாய்
பெண்ணவள் அங்கம்
மெல்ல நடை போடக் கண்டேன்!

என்னவள் அங்கம்
அன்ன நடை போடக் கண்டேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஒரு குளிகை நேரம்

ஞாபகச் சாரல்
தெறிக்கிறது நெஞ்சுக்குள்
நினைவுப் போர்வைக்குள்
சுருண்ட படி இளமை!

பட்டாம்பூச்சியாய்
வட்டமிட்டபடி
சுற்றிக் கொண்டிருக்கிறது
எப்போதும் ஒரு நினைவு!

அது ஒரு வசந்த காலத்தைச்
சார்ந்திருக்கிறது

குளிர் படர்ந்த மார்கழியின்
அதிகாலைப் புலர்வு போலும்
புல் நுனியின் பனித்துளி மேல்
சூரியக் கதிர் ஒளிர்வது போலும்

புன்னகைப் பன்னீர் தெளிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூங்கிலை வருடிச் செல்லும்
காற்றின் ரீங்கார சங்கீதமாகவும்
மெல்ல வருடிப் போகும்
ரோஜா மலரின் ஸ்பரிசமாகவும்
உணர்வுகளில் தித்திக்கின்றது!

கடும் வெப்பத்தையே
பருகி விடுகின்ற
ஒற்றை மர நிழலைப் போலே
மகிழ்ச்சிக் குடை விரிக்கிறது!

பௌர்ணமி நிலவின்
இனிய தென்றலையும்
அப்படியே பிரதிபலிக்கிறது!

இப்போதும்
அந்தப் பருவ முத்தத்தின் ஈரப்பதன்
கன்னத்தில் குளிர்ந்தபடியேதான்!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகையில் தொலைந்தேன்

விழி பேசும்
கவி மொழியே
வில் வளைவு
இமை வடிவே

மயக்கும் அழகு
முழு மதியே
மயங்கிப் போனது
நிறை அறிவே

பார்வை அம்பு
வீசும் ரதியே
உன் புன்னகையில்
தொலைந்தேன் சகியே!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியே நமது இருப்பு

கலை பண்பாடுகளால்
கட்டமைக்கப்பட்டது
நமது அடையாளம்!

தனித்துவத்தை
இறுகப் பற்றியிருக்கிறது
நமது கலாசாரம்!

வானம் போல் பரந்து
அண்டமெங்கும் விரிந்து
கதிரவன் போல் பிரகாசிக்கிறது
நமது தாய் மொழி!

நவீனத்திலும் வீரியத்தைப்
பறை சாற்றியிருக்கிறது
தன்னிகரில்லாத் தமிழ் மொழி!

காற்றுப் போல் வியாபித்து
தேசங்கள் கடந்தும்
ஒலிக்கிறது தமிழின் நாதம்!

இருள் சூழ்ந்த பொழுதுகளிலும்
நிலவாகப் பிரகாசிக்கும் வல்லமை
நமது மொழிக்கான பண்பியல்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட பல ஆண்டுகளாய்
தொன்மையும் புதுமையும்
ஒருங்கமையக் கிளை பரப்பியதே
முச்சங்கம் வளர்த்த மொழி!

ஆதிக்க வாதம்
அடிமை செய்யும் போதெல்லாம்
நிலம் புடைத்து எழும் நாற்றாக
எழுச்சி கண்டது நமது மொழி!

பகைவனும் வியந்து போற்றும்
பெரும் சிறப்பு - நமது
தமிழுக்கு மட்டுமேயானது!

தீ மூட்டிய யாழ் நூலகத்தில்
தீயாகி வென்று வந்த மொழி
அழித்தாலும் எரித்தாலும்
தன்னிலை மாறாத ஒற்றை மொழி!
குமரிக்கண்டம் ஆண்ட தமிழ் மொழி! ●

- தினகரன் : 05.06.2019
- தினக்குரல் : 09.06.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்கள் என்னைத் தேடக்கூடும்

நீரும் நிலமும்
வானும் காற்றும்
மரமும் மலையும்
செடியும் கொடியும்

கடலும் அலையும்
மலரும் வனமும்
இயற்கையில் அனைத்தும்
ஏன் மனிதரில் சிலரும்

என்னை ஒருநாள் தேடக்கூடும்
இயற்கையை நேசித்தவன் ஆதலால்
இயற்கையே என்னை எண்ணி
இரங்கற்பா பாடக்கூடும்

என் உணர்வுகளில் சிலதை
ஏட்டில் எழுதிவிட்டேன்
என் எண்ணங்கள் பலதை
தமிழுக்குள் விதைத்துவிட்டேன்

எங்கும் என்னைத் தேடாதீர்கள்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பழைய புகைப்படத்திலோ?
நான் உடுத்திய ஆடையிலோ?
விரும்பிப் பாவித்த
பாவனைப் பொருட்களிலோ?
மூச்சுக்கலந்த காற்றிலோ?
இரவு நேர வானிலோ?
ஒளிரும் உடுவிலோ?

பூமிக்கடியிலோ?
அக்கினிச் சுவாலையிலோ?
எங்கும் நான் வாசம் கொள்ளப்
போவதில்லை!

பல யுகங்கள் தாண்டி
என் சந்ததி என்னைத் தேடக்கூடும்
அவ்வாறு நேர்ந்தால்
சில தடயங்கள் தென்படலாம்

ஆம், அப்போது நான்.
தமிழுக்குள் வியாபித்திருப்பேன்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் என்னைத் தவிக்க விட்டதில்லை

மருதாணியிட்ட கரங்களால்
மாலை நேர மேற்கு வான்மங்கை
செங்கம்பளம் விரித்திருக்கிறாள்

நீண்டு பரந்து கிடக்கும்
இந்தக் கடற்கரை வெளிதான்
என் தேடல்களுக்கு எப்போதும்
தீனி போட்டுக்கொண்டிருக்கிறது

எந்தன் சிந்தனைகள்
நினைவுகளைக் கடந்த
நிஜங்களை மட்டுமே
தேடிக்கொண்டிருக்கின்றன

காரிருள் மெல்ல மெல்லக்
கவர்ந்திழுத்துப் போகிறது
என்னோடு துணைக்கு வந்த
அந்தச் செம்பவளக் கதிரவனை

அகப்பட்டுக் கொண்டேன்
தனிமையின் அடர் வனத்தில்
தனிமையில் நிஜங்களை விட
நினைவுகளுக்கே பலம் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளத்து வேதனைகள்
ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டது
தேற்றித் தேற்றியே
போராடித் தோற்றுப் போகிறேன்

தவிர்க்க முடியாமல்
உணர்வின் ரணங்களுக்குள்
சிக்கிக் கொண்டது சிந்தனை

துயர் சூழ்ந்த அடர் இருட்டில்
தனித்திருக்கிறேன்
ஒற்றைப் பறவையாய்

என்னைச் சுற்றிலும்
நிசப்தமே வியாபித்திருக்கிறது

ஆனாலும் எப்போதும் போலவே
தமிழும் சில வார்த்தைகளும்
இப்போதும் துணையாகியிருக்கிறது! ●

- தினகரன் :09.03.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனையில் வாழ்வியல்

பூக்களின் நறுமணத்தை
உடுத்தி வரும் காற்று!

புன்னகையை அணிந்தபடி
தலையசைக்கும் பூக்கள்!

பச்சை நிறப் போர்வைக்குள்
படுத்துறங்கும் வயல்வெளி!

கதிரவனின் ஒளித்தெறிப்பில்
ஒளிருகின்ற நெல்மணிகள்!

முண்டாசு கட்டிய படி
உணவு படைக்கும் கடவுள்கள்!

ஓவியத்தை ஏந்தியபடி
புற்றரையில் வண்ணத்துப்பூச்சி!

ரீங்காரம் மீட்டுக் கொண்டே
உலாப் போகும் சிறு வண்டு!

தேனை மெல்ல அருந்திவிட்டுப்
பாட்டுப் பாடும் தேன்சிட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப் பசுவைச் சுற்றியபடி
துள்ளிக்குதிக்கும் கன்றுக்குட்டி!

பறவைகள் வதிவிடமாய்
நிழல் பரப்பும் ஆலமரம்!

சலங்கைகள் ஒலியெழுப்ப
அசைந்து வரும் மாட்டு வண்டி!

சலசலத்துப் பாய்ந்தோடும்
எழில் மிக்க வெள்ளை அருவி!

அதில் குதித்து விளையாடும்
விடுமுறை நாளில் சிறுவர்கள்!

சின்னஞ் சிறு குடிசைக்குள்
மகிழ்ச்சியின் மொத்த ஆரவாரம்!

ஆம், இப்போது
நகரங்கள் ஆகிவிட்ட
கிராமத்து நினைவுகளில்

கற்பனையில் மட்டும் தான்
இவற்றைக் காணக் கிடைக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் வல்லமை

உண்மையின் தெருவிலே
உலாப்போகும் பொய்மை!

நம்பிக்கை அரங்கிலே
நடனமாடும் துரோகம்!

சுயநலத்தின் சாலையிலே
தவித்து நிற்கும் உள்ளம்!

நன்மையை விதைத்தும்
விளைகின்ற தீமை!

நட்புப் பயிர் வயலிலே
முளை விடும் ஏமாற்றம்!

பாசத்தை போர்த்தியபடி
உலாவுகின்ற பொய்க்கூட்டம்!

நடுத்தெருவில் நிறுத்தியே
புன்னகைக்கும் பொறாமை!

நல்லதாய் தோன்றுகின்ற
தீயவற்றின் மாயவேடம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் பார்த்திருந்து
கைவிடுகின்ற சொந்தம்!

உயர்வுகள் பொறுக்காமல்
தூற்றித்திரியும் சுற்றம்!

எல்லாமே முடிந்த பின்பு
வேடிக்கை பார்க்கும் உலகம்!

சுற்றியிருக்கும் அத்தனையும்
சூழ்ச்சியால் சூழ்ந்திருக்கும்!

தட்டித்தவறி எழுந்தாலும்
வீழ்த்திடவே காத்திருக்கும்!

ஆனாலும்
தன்னம்பிக்கை மட்டும் தான்
வாழ்விற்கு வல்லமை தரும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமை சுட்டெரித்த தீ

முறுக்கு மீசையில் புரட்சித் தமிழே!
எட்டையபுரத்தில் உதித்த கவியே!
மிடுக்கு நடையே எடுப்பாய்த் தெரியும் உடையே!
வீறு கொண்ட வீரத்தமிழ் புலமைத் தீயே - பாரதியே!

சங்கத் தமிழை சிந்தை நிறைத்து
சந்தம் குழைத்துப் புதுச் சிந்து படித்து
விந்தை புரிந்த முத்தமிழ் பாட்டனே!
விடுதலைக்கவி விதைத்த வித்தகனே -
தமிழ்க்கவி வித்தகனே!

கட்டுடைத்துப் புதுக் கவிசமைத்து
தாய் தேசம் தன்னை உயிரென மதித்து
பெண்ணடிமை விலங்குடைத்து
சரித்திரத்தையே புரட்டிப் போட்ட
பெருங்கவியே - அருங்கவியே!

கேளடா மானிடா என்றே
மானிட ஒற்றுமை தேடி
சாதி மத பேதம் போக்கிட
வாழ்வியலுக்கே அர்த்தம்
புகட்டிய புலமையே- கவிப்புலமையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலைக்கும் கவி படைத்து - தமிழர்
மனமெல்லாம் குடியமர்ந்து
பக்தியிலும் புரட்சி செய்து
பாரின் தீயாய் தீமை சுட்டெரித்த தீயே -
பாரதீ யே!

எத்தனை பாடல்கள் எத்தனை கவிதைகள்
அத்தனையும் அற்புதங்கள் அழியாத
பொற்தடங்கள்
சிறியோன் யான் வேறென்ன
நானுரைப்பேன்
தொடருகிறேன் பாரதி வழியில் - மகாகவி
பாரதி வழியில்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசை மாறிய ஓடங்கள்

ஈழ வானம் கறுத்தே கிடக்கிறது
தமிழர் பயணம் வலித்தே நகர்கிறது
எம் எண்ணங்கள் கரையைத் தேடி
ஏக்கம் கொண்டே தவிக்கிறது!

வாழ்வு தேடும் நீண்ட பயணமிது
துயரத்தை மட்டுமே சுமக்கிறது
அண்ட வெளிகள் அகன்று கிடக்க
அலைகள் வந்து எமையே அடிக்கிறது!

வேற்றுத் தேசப் புயற் காற்றும்
இங்கே தான் கொண்டது மையல்
சூறாவளிகளும் சூறையாடிய தேசம்
சுருண்டு தான் கிடக்கிறது இன்று!

இருள் மேகம் கூடி வந்து
துயர் மழையாய் நனைக்கிறது
நகக் கண் இடுக்குகளிற் கூட
வலிகளால் நிறைந்து கனக்கிறது!

அமைதியான நதியின் மீதே
அழகாய் ஓடும் ஓடங்கள் - இங்கே
அகோர அலைகள் அநீதி செய்தது
திசைகள் நான்கும் சிதறியே போனது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாத ரணங்கள்

சாம்பலைப்
போர்த்தியிருக்கிறது
தீயில் வெந்து நொந்த தேசம்!

உன்னத உயிர்களை
விலையாய் எடுத்தது
உதயமாகாத விடியல்!

வீரக் குருதி
ஆறெனப் பாய்ந்தும்
அரும்ப மறுத்த சுதந்திரம்!

புலரும் பொழுதில்
விடியலைப் புசித்தது
வீணரின் சதி!

மண் தழுவி ஓடும்
கானகத்துக் காட்டாறாய்
கண்ணீரின் பெருக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சுண்ட காட்டு வழி
நடு நிசிப் பயணமாய்
நகர்கின்ற வாழ்வு!

காலங்கள் பல கடந்தும்
ஆறாத ரணங்கள்!
ஆற்றொணாத் துயரத்தில்
எம்மவர் மனங்கள்!

மகத்தான தியாகத்தால்
மண் கண்ட புனிதம்!
மதியிழந்து போனோரால்
மண்ணிற் பேரவலம்!

தமிழரோடு துயர் என்றோ
செய்ததோ ஒப்பந்தம்?
ஆகையாலோ தொடர்கிறது
இடைவிடாத பெருந்துயரம்!

●

- தினக்குரல்: 07.07.2019
- மெட்ரோNEWS : 24.05.2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலி

தேர்ந்தெடுத்த
கதியால்கள் கொண்டு
தீர்க்கமாகப் போட்டாரே
வலுவான வேலி அன்று!

பயிரைக் காக்கப்
போட்ட வேலி
களைக்கல்லவோ
காவலானது இன்று!

பொதுநலக்
கதியால்கள் எல்லாம்
தன்னலத்தில்
பயணிக்கின்றன இங்கு!

தனித்தனியே
பிரிந்தன கதியால்கள்
ஒற்றுமையின்றி
கடமையைக் கொன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்கள்
மறந்துதான் போயின
சந்தர்ப்பங்கள்
வீண்விரயம் ஆயின!

யாதொன்றும்
அறியாமற் பயிர்களும்
வேலியையே இன்னும்
நம்பிக் காத்திருக்கின்றன!

பறிபோகும் உறுநிலங்களும்
குறுகிக் குறுகியே
குறுநிலமாகவே
மாறும் நிலைதான் இங்கே!

வேலியையே
நம்பிய பயிர்களும்
வேதனையில்
உழல்கிறது நித்தமும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கெட்டும்
சிதறிய பயிர்களும்
அயல் நிலத்திலே
அடிமையாக வாழும் நிலை!

வேறு வழி ஏதுமின்றியே
வேலி போட்டவரையே இன்று
தேடுது பயிர் நெஞ்சம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றங்களின் நீட்சி

காலாவதியான புகைப்படத்தில்
உருவங்களைத் தேடியபடி

கண்களுக்குள் விம்பங்களை
கனத்த மனதுடன் சுமந்தபடி

நீள்கின்ற வினாக்களிற்கு
குறுகிய பதிலும் கிடைக்காமல்

நெஞ்சிலே ஏக்க மிகுதியோடும்
நீர் வற்றிப் போன விழிகளோடும்

வீதியிலும் பெருந் தெருவிலும்
பதாதைகளைச் சுமந்து திரிந்து
நா வறண்டு கோசமிடுகிறாய்

தள்ளாடும் வயோதிபத்திலும்
கண்மூட முன் பார்க்க வேண்டி
கொஞ்ச உயிரையும் கையிலேந்தி
மகனுக்காகத் தவம் கிடக்கிறாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றங்களின் நீட்சி
முடிவிலியாகத் தொடர்கிறது
ஏக்கமும் பரிதவிப்பும்
தொடர்கதையாக மாறியது

ஆனாலும் நீ
நம்பிக்கொண்டுதான் இருக்கிறாய்
கடவுளை அல்ல:

தீர்வு தீர்வு என்று காலம் கடத்தும்
ஏமாற்று அரசியல் நாடகத்தையும்!
நல்லாட்சி என்ற மாய பிம்பத்தையும்! ●

- உதயன்: 23.06.2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்துப் போன மனிதம்

பாவிகள் மலிந்த
பரிதாபப் பூமியிது
பாவங்கள் மட்டுமே
தினம் விதைக்கப்படுகிறது!

நீதியை அழித்து
வக்கிரத்தை வளர்த்து
அநீதியின் வழியிலே
தீவிர சூழ்ச்சி நடக்கிறது!

பச்சிளம் சிசுவும்
பரிதவிக்க உயிர் துடிக்க
பாதகத்தின் உச்சத்திலே
உக்கிரம் நிகழ்கிறது!

பலியாகும் உயிர்களோ
அப்பாவிப் பொது மக்கள்
பலி எடுக்கும் இராட்சத
மனிதக் கொடூர மிருகங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மத இன விரோத
சாக்கடைக்குள் சிக்கியே
மகத்தான மனிதமும்
மரணித்துப் போகிறது!

வாழும் சொற்ப காலமும்
கலக்கத்தால் நீள்கிறது
ஏக்கத்தால் வாழ்க்கையும்
வினாக்குறி ஆகிறது!

- மெட்ரோNEWS 03.05.2019
- தினக்குரல் 12.05.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசகம்

ஏக்கம் கொண்ட
விழிகள் தவிக்க
பரிதாப வதனம் கண்டேன்!

சுருங்கிப் போன
வயிறு ஒடுங்க
தள்ளாட நடக்கக் கண்டேன்!

ஆலய வாயிலிலும்
அங்காடி வீதியிலும்
அல்லற் படும் அவலம் கண்டேன்!

கோடையின் புழுக்கத்திலும்
கொடும் பனி நடுக்கத்திலும்
வீதியோரம் உறங்கக் கண்டேன்!

இயற்கையும் வஞ்சிக்க
இறைவனும் காணாதிருக்க
மனிதமும் மரணிக்கக் கண்டேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தல் உடையிலும்
கரடு முரடான மேனியிலும்
கருணையின் வடிவமும் கண்டேன்!

வாழ்வதற்கு வழிதேடி
வாய்விட்டுக் கேட்கத் தயங்கி
கை நீட்டும் யாசகத்தைக் கண்டேன்!

சில சில்லறையேனும்
மனமிரங்கிக் கொடுங்கள்
அவர்கள் காய்ந்து போன உடலில்
கொஞ்சம்
உள்ளமாவது குளிர்ச்சி பெறட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுபடுதல்

ஒரு மௌனப் பெரு வெளியில்
தனித்து விடப்பட்டதாய் உணரும்
ஏகாந்தக் கொடுஞ் சிறைக்குள்

பொலிவிழந்து போகிறாய்
அதுவே துன்ப மிகுதி என்று
விம்மி உள்ளம் உடைகிறாய்

எதுவும் கடந்து போகும்
பிரபஞ்சமே குறுகியதாய்த் தோன்றும்
பிம்பத்தைக் கலைத்து விடு

துன்பத்தருணங்களே - வாழ்வை
அழகுறச் செதுக்கும் உளிகள்
வலிகளே வண்ணமாகும் - வரும்
நாழிகைகளின் ஒளிகள்

புன்னகையை காவு கொடுத்த
நாட்களைத் தீயிலேற்று
கைவிரல் கணுக்களுக்கும்
தன்னம்பிக்கை உரமூட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாந்தத்தை சிந்தனைகளால் அலங்கரி
கன்னக் குழிகளையும்
மகிழ்ச்சியால் நிரப்பு
புன்னகை மேவிய பொழுதொன்றில்
வா இப்போதே தொலைந்து விடலாம்! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நாடு

அன்னை ஊட்டிய அமுதும்
தந்தை புகட்டிய அறிவும்
சிந்தை முழுதும் நிறைந்து - உயிர்
சொந்தம் கொண்டது ஈழநாடு!

தவழ்ந்து நடை பழகியதும்
தடுக்கி வீழ்ந்திடத் தாங்கியதும்
உணவு உறையுள் வழங்கியதும் - எம்
உணர்வில் உன்னதம் நிறை நாடு!

பாட்டன் முப்பாட்டன் ஆண்டதும்
பண்பான பைந்தமிழ் தழைத்ததும்
ஏட்டுடைப் புலவர்கள் போற்றியே - எம்மவர்
ஏர் பிடித்து வாழ்ந்த திருநாடு!

வித்தையும் ஞானமும் கற்பித்து
வீழ்ந்திடா வீரத்தை நிரூபித்து
உலகமே வியப்புடன் நோக்கிய - வீர
வரலாறு கொண்டதெம் தாய்நாடு!

- தினக்குரல் : 02.06.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் என்பவர் யார்

வார்த்தைகளால் காட்சிகளைச்
சிந்தனைக்குள் புகுத்துபவர்
கருத்துக்கள் சிதையாமல்
புதுமைகள் நிகழ்த்துபவர்

கவிதையின் கட்டமைப்பை
நன்கறிந்த வித்தைக்காரர்
கற்பனையாலும் உண்மைகளாலும்
மாற்றங்களை விதைப்புக்காரர்

மொழியின் ஆழத்தை
அழகுபடச் செதுக்குபவர்
புலமையும் ஞானமும்
மொழிப்பற்றும் மிகுதிக்காரர்

நீதிக்கு துணையான
எழுத்தாணிப் புரட்சிக்காரர்
வரலாற்றில் நிலைத்திருக்கும்
எழுத்துக்களாய் வாழ்ந்திருப்பவர்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கவிதை

இறுக்கங்கள் தளர்த்தி மிக
இனிமையாய் தெளிந்த மொழி
இயல்பான சொல் நயனத்தை
இசைப்பாங்கில் ஒலிக்கும் வழி!

எளிமையாய் வார்த்தை கோர்த்து
வலிமையான வரிகள் சேர்த்து
பாமரர்க்கும் ஞானம் புகட்டிடவே
பாங்காய் அமைந்த புதுப்படையல்!

கருத்தாழம் செறிந்த வகையில்
கனதியாய் சொற்கள் பதித்து
காலத்தின் போக்கிற்கு ஏற்ப
கையாளும் இலக்கியப் புதுமை!

பழமையை தன்னுள் அடக்கும்
புதுமையை தாண்டிக் கடக்கும்
வையத்தின் பக்கங்களை எல்லாம்
வகையாகக் காட்சிப் படுத்தும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் ஊற்றாய் விளங்கும்
உணர்ந்திட தமிழும் சுரக்கும்
நவீனத்தின் வளர்ச்சிப் போக்கில்
நிலைத்திடும் தமிழின் அவதாரம்!

கருத்துக்களைக் கடத்திச் செல்ல
கவிஞர்கள் கண்ட புதுவழி
காலத்தின் புரட்சிகர மாற்றத்தால்
கருக்கொண்டதே இந்தத் தமிழ்வழி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனக்கும் இதயம்

இறைவனைத் தேடி
அலைகின்ற மனிதா
இறைவன் உனக்குள்
இருப்பதை மறந்தாய்

இருப்பதை இல்லானுக்கு
உதவிட முடிந்தால்
இறைவனே நீயன்றி
வேறில்லை உணர்வாய்!

துயரத்தில் தவிக்கின்ற
மனிதர்கள் பாரில்
பார்த்தும் பாராது
நகர்கின்றாய் வாழ்வில்

விபத்தில் சிக்குண்டு
துடிக்கின்றார் தெருவில்
தெரிந்தும் தெரியாததாய்
விரைகின்றாய் நீயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கு முன்னே
அநீதியைக் கண்டும்
கண்மூடிப் போவது
எவ்வகை நியாயம்?

கனக்குது இதயம்
மனிதனின் செயலால்
நவீனத்து மனிதா
எங்கேயுன் புனிதம்?

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையூட்டு

நீதியும் நியாயமும்
அடங்கி ஒடுங்கி இங்கே
அநீதியும் அநியாயமும்
அகோரத் தாண்டவம் ஆடிடுதே!

குற்றம் இழைத்து விட்டு
குதூகலம் போடுகிறான் ஒருவன்
பணத்தை இறைத்துவிட்டு
பலதும் பத்தும் செய்கிறான் மற்றொருவன்!

வாழ வழியின்றித் தவிக்கிறான்
ஏழை எளியவன் இங்கே - ஏனோ
பணம் படைத்தவனின் தந்திரத்தால்
வீண் பழியும் ஏற்கின்றான் உத்தமன்!

கல்விச் சாலை முதல்
காவல் நிலையம் ஈறாக - நித்தம்
ஆலய வாயில் தொடங்கி
நீதி மன்ற வளாகம் வரை கையூட்டு...

போலிகளாலும் பொய்யர்களாலும்
சூழ்ந்து விட்ட வையகத்தில்
பார்க்கும் இடமெல்லாம் குறுக்குவழி
அதிகாரத்தின் ஆட்சியிலே - ஐயகோ! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளி

நெற்றி உதிர்க்கும்
முத்தை மண்ணிலே
நித்தம் விதைக்கிறான்!

உருக்கும் வெயிலில்
உடலை வருத்தி
உழைப்பைத் தருகிறான்!

மதி பல சொல்லினும்
மன வழி செல்லும்
மகத்துவம் பெறுகிறான்!

உண்மை நேர்மை
மனிதப் பண்பை
மதித்து வாழ்கிறான்!

அன்றைய உழைப்பிலே
அன்றாட வாழ்வில்
ஒளியைக் காண்கிறான்!

அகிலம் தழைக்க
அனைத்தும் சிறக்க
அடிப்படை ஆகிறான்!

- மெட்ரோ NEWS: 10.05.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடராக வேண்டாம் வரமாக வா

வானுக்கும் மண்ணுக்கும்
தூது வரும் தேவதையே

மண் மீது நீ கொண்ட
அன்பின் ஆழம் மிகப்பெரிதே

மானிடரின் செய்கைகளால்
நீ கண்டாய் பேரிடரே

உன் வரவு அருகியதால்
மனித வாழ்விற் பெருந்துயரே

காத்திருக்கும் தருணங்களில்
விழி வேர்க்க வைக்கின்றாய்

எதிர்பாராப் பொழுதுகளில்
அனர்த்தம் ஏன் நிகழ்த்துகிறாய்

விண் விட்டு மண் தொட்டு
வசந்தம் கொண்டு வருவாயா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சி இன்றித் தவிக்கின்ற
நிலத்தின் வெம்மை அறிவாயா?

உயிரைக் கையில் பிடித்தபடி
மரஞ் செடிகள் காத்திருக்கு

ஊரே உனை எண்ணி
வரட்சி கண்டு தவமிருக்கு

சின்னஞ்சிறு சிறுசுகளும்
நோய் நொடியில் துடிக்கிறதே

வரண்டு போன வயல் நிலத்தில்
சுடு புழுதி பறக்கிறதே

கரு முகிலைக் கண்டு கண்கள்
நாட்கள் பலவாகியதே

கானகத்து மயில்களுக்கும்
நடனம் மறக்கப் போகிறதே!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னோடு சிறகு விரித்திடு

வண்ணத் தேவதையே
வானவில் நிறத்தவளே!
வசந்தத்தின் நாயகியே
வண்ணத்துப்பூச்சி எழிலாளே!

மலர்களின் காதலியே
மனங்களை மயக்குகிறாய்!
மழலைகள் மகிழ்ந்திடவே
மாயங்கள் நிகழ்த்துகிறாய்!

எண்ணங்கள் தவிக்கிறதே
உன்னுடனே பறந்திடவே!
சற்றேனும் என்னோடு
சிறகுகள் விரித்திடுவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்று வெளி

பூக்களின் நறுமணம்
சுமந்து வரும் தென்றலே!
பூமியும் புன்னகை
பூத்தது உன்னாலே!

இயற்கையை தழுவியே
இனிமையாய் வீசுவாய்!
இதயங்கள் குளிர்ந்திட
இனிய ராகம் மீட்டுவாய்!

காடுகள் மலைகளை
கடந்து நீயும் வருகிறாய்!
கன்னியே உன்னையும்
களங்கம் இங்கு செய்கிறார்!

இயற்கையை அழித்தவர்
செயற்கையை வளர்க்கிறார்!
இயந்திரங்கள் படைத்தவர்
நச்சுக்களை இறைக்கிறார்!

நாகரிகம் என்று சொல்லி
நாச வேலை செய்கிறார்!
மாசுக்காற்றைத் தோற்றுவித்து
மூச்சுத் திணறிச் சாய்கிறார்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்தின் தேவனே

மனித மனங்களும்
குறுகியே போனதே!
வஞ்சனையும் சூழ்ச்சியும்
வையத்தை ஆளுதே!

நீயா நானா
போட்டியே நிகழுதே!
அநீதியே அதிகார
ஆசனம் ஏறுதே!

அழிவின் விளிம்பிலே
மானிடம் நிற்குதே!
தர்மத்தின் தேவனே
அவதரிக்க மாட்டாயோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைவேன் உலகினை

எந்தன் கரத்திலோர்
எழுதுகோல் ஏந்தியே
சிந்தையிலே சீரிய
சரித்திரம் நிகழ்த்துவேன்!

எண்ணக் கனவினை
வண்ணக் கவியாக்கியே
எண்திசை எங்கிலும்
பைந்தமிழ் முழங்குவேன்!

மண்ணிலே மானிடர்
வாழ்வு வளம்பெற
நல்வழி காட்டியே
வரைவேன் உலகினை!!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள் தைத்த மலர்

காக்கும் கரங்களிலே
உதிரக் கறைகளின் படிவு!
கதறி அழுகிறது பெண்மை
கற்பை பறிகொடுத்து விட்டு!

உயிர் பிரிந்த உடலங்களும்
சிதைக்கப்படும் பேரவலம்!
வக்கிரங்களின் தொழிற்பாடு
வன்கொடுமையாக வெளியீடு!

காவல் செய்யும் வேலிகளும்
பயிர்களையே மேய்கின்றன!
உற்ற உறவுகளும் உடலுக்காய்
உணர்விழந்து மிருகமாகின்றன!

பெண்மைக்கு அரணாகும்
ஆண்மையின் வீரமோ?
கருவறுத்துக் கசக்கி எறிய
கங்கணம் கட்டி அலைகிறது!

முள் தைத்த மலராகி மடிகின்றன
கனவுகளை சுமந்த சரித்திரங்கள்!
சிந்திக்க மறந்த நவீன மனிதம்
கதை அளந்தே கடந்து விடுகிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறும் மனிதர்கள்

உள்ளத்தில் ஒரு வகை
நச்சுக்கள் நிரப்பிய
நல்லவர் வேடத்தை
தரித்த போலி மனிதர்கள்!

தேவைகளை தீர்த்திடவே
தேடிச் செல்வார் சேவகராய்
தேவைகள் தீர்ந்து விட
ஓரங்கட்டி விலகிச் செல்வார்!

நம்பிக்கையும் சத்தியமும்
நீத்துப் போகக் காரணமாய்
நிறம் மாறும் மனிதர்களால்
உறவுகளும் பொய்க்கிறது!

அன்பையும் சூடிடுவார்
அனுதாபமும் தேடிடுவார்
நாளொரு தோற்றமுமாய்
பொழுதொரு மாற்றமுமாய்!

பச்சோந்திகள் கூட இங்கு
தமைக் காக்க நிறம் மாற
மனிதர்களிடம் மட்டும் ஏன்..?
சுயநலமாகப் பல மாற்றங்கள்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ஜாலம்

உண்மைகள் உறைந்து கிடக்க
பொய்மைகளை வலிந்து சூட்டி
வண்ண வண்ண வடிவங்கள் மாட்டி
வாய்ஜால வித்தைகள் நிகழ்த்துவார்!

அலங்கார வார்த்தைகள் ஆயிரம்
அழகாய் அணிவகுப்பு நடத்தும்
ஆபத்தின் விதைகளைக் கூட
ஆங்காங்கே சிறப்பாக விதைப்பார்!

தன்னைப் புகழ்ந்திட வஞ்சிக்க மாட்டார்
மற்றவரைக் குறைகூறப் பின்னிற்க மாட்டார்
இடம் பொருள் ஏவல் எதுபற்றியும்
கவலை கொள்ளாத கனவான்களானார்!

செயல்களுக்கு இங்கே இடமில்லை
வெற்று வார்த்தைகளுக்கே முதலிடம்
விண்வெளி கூடச் சென்று வருவார்
விஞ்ஞானிகளை மிஞ்சிய வாய்ஜாலக் காரர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் வேடிக்கை

காதல் இன்று போலி யானது
காமம் தலைக் கேறிப் போனது
வீதி எங்கிலும் வேடிக்கை யாகுது
விலங்குகள் போலவே தெருவிலே மேயுது!

இளமை வெறும் இச்சையைத் தேடுது
இதயம் தொட ஏனோ மறுக்குது
ஒன்று போனால் இன்னொன்று நாடுது
ஒற்றுமை இன்றியே இடையிலே பிரியுது!

எங்கோ ஒன்றுதான் உண்மையாய் வாழுது
ஏனோ அதையும் காலம் பிரிக்குது
காதல் என்பது கடவுள் போன்றது
காதலின் உன்னதம் உண்மையாய் வாழ்வது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிக் காட்டில் ஓர் பைங்கிளி

சேற்றிலே உதித்திட்ட
செந்தாமரை மலரே - நீ
சேரியிலே ஒளிர்ந்திட்ட
வண்ண வான் நிலவே!

காற்றிலே தவழ்ந்து வரும்
மல்லிகைப் பூ மணமே - அந்த
மரங்கொத்தி போல நிதம்
மனம் கொத்தும் விழியே!

நடை பயிலும் சாலையெல்லாம்
சோலையாகும் எழிலே - என்
சோகங்களைத் தீர்த்துவிடும்
அமிர்தம் உன் குரலே!

வாலிபமும் அரும்புதடி
வளைந்த நூல் இடையினிலே
காலையிலும் எரிகிறதே - அந்த
சூரியனும் உன் நடையினிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர மண்டலத்தை
நெற்றியிலே கொண்டவளே
சந்திர கிரகணமாய்
விழுங்குதடி ஓரப்பார்வை!

கோபப்பட்டுப் பார்த்தாலே
சூரியனும் உச்சம் கொள்ளும்
கொவ்வைப்பழ இதழ் விரித்தால்
நட்சத்திரங்கள் பூக்குதடி!

நெஞ்சத்தில் கூடு கட்டி
வசிக்கும் என் வஞ்சிக்கொடி
இதயத்தை வருடிச் செல்லும்
பட்டிக்காட்டுப் பைங்கிளியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாய் நான்

என் உணர்வுகளுக்கு
உயிர் கொடுக்கின்றேன்
கனவுகளை அள்ளி
விழியோரம் பூசிக்கொள்கின்றேன்!

ஆறாம் விரலாய்
முளைக்கும் எழுதுகோல்
அனுபவ அறிவினை
ஆட்சி செய்யட்டும்

பரந்த வெளிகளில்
பறந்து திரியும்
பட்டாம்பூச்சியைப் போலே
என் சிந்தையும்

அண்ட சராசரங்களை
அளந்து கடக்கட்டும்
ஆங்காங்கே வண்ணங்களை
கொட்டிப் பறக்கட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையின் வாயில்கள்
தேடியே வீசட்டும்
எந்தன் எழுத்துக்களின்
எழுச்சிக் காற்று!

அடிமைத்தனம் அறவே
ஒழிந்திடவே பொழியட்டும்
எந்தன் தமிழின்
புரட்சி மொழி!

வலிகளிலெல்லாம் மொழிகள்
புதிதாகப் பிறக்கட்டும்
வார்த்தைகளின் உயிர்ப்புக்கள்
விடியலை விலைபேசட்டும்!

எந்தன் கரங்களை
நானே உளி செய்கின்றேன்
என்னை நானே
செதுக்கிக் கொள்வதற்கு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை நான் தேடுகிறேன்

என் உறக்கங்களை
இரவுகளுக்கு தாரைவார்த்து
நிசப்தங்களில் நிஜங்களைத் தேடுகிறேன்

தொலைந்து போகப்போகும்
இந்த மெய்யிலிருந்து
அந்த மெய்ஞானத்தைத் தேடியே
ஓய்ந்திருக்கிறது பல நாழிகைகள்

பல பொழுதுகளில்
கரைந்திருக்கிறேன்
சில பறவைகளிடம்
தகவல் சொல்லியிருக்கிறேன்

வயல் வெளிகள் தோறும்
நடந்திருக்கிறேன்
வண்ணம் சிந்தும் பட்டாம்பூச்சிகளிடம்
என்னைப் பற்றி விசாரித்ததுண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அலைகடலுக்கும்
தெரியாமலில்லை
மலை நீங்கி வரும் அருவியும்
தரு தழுவி வரும்
தென்றலும் கூட அறிந்திருக்கின்றன

என்னைச் சிற்பம் செய்த
இந்தச் சிந்தனைக் கீற்றுக்கள் கூட
பல தடவை என் வினாக்களால்
தோற்கடிக்கப்பட்டிருக்கிறது!

இந்த மாயை உலகுக்குள் சிக்கிய
எனக்கான விடை
கிடைக்கப்போவதில்லை
ஆனாலும் நிறுத்தப் போவதில்லை
என் தேடலை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தன் கனவு

இருளைக் குடித்திருக்கும்
ஏகாந்தப் பொழுதொன்றில்
ஒளிக் கீற்றுக்களாய்
எனக்குள் ஊடுருவுகிறது கனவு

ஒளிரும் மன ஓடையில்
சலனமின்றி நீந்துகிறது
வலிமை பெற்ற என் கனவு

எந்தன் கனவின் பிரசவிப்பு
சிந்தைக்குள்ளே நிகழ்ந்திருக்கிறது
அறிவின் வழிகாட்டலிலேயே
அது வழிநடத்தப் படுகிறது

உங்கள் கனவு போலல்ல
உறக்கத்தைக் கொடுப்பதோ
உறக்கத்தைக் கெடுப்பதோ அல்ல

அதி பயங்கரமானதோ
ஆழப் பதிந்த நிகழ்வுகளால்
உருவான பிம்பமோ அல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக என்னை
உறங்க விடுவதே இல்லை

வெற்றிக்கான ஓடத்தின்
கலங்கரை விளக்கம் அது
வாழ்க்கையின் திசைகாட்டியது!

அது ஒரு இலட்சியச் சிகரத்தின்
அழகிய ஏணி!
அந்தக் கனவை நீங்கள்
அறிந்திருக்க வாய்ப்பில்லை!

காரணம் நான் கனவை
விழி திறந்தே காண்கின்றேன்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த மழை

எதிர்பாரா
மழை நாழிகையில்
குடை விரித்திருக்கிறது
அந்த ஒற்றை மரம்!

காரிருள் நிரப்பிய
மேகங்கள் கருக் கொள்ள
வண்ணம் குழைத்து
வானவில் பூசுகிறது வானம்!

மழைத் தூறல்கள்
மலர்களாய்த் தூவிட
மனம் திருடுகிறது
எதிரே ஒரு வயற்காடு!

துளிகளைச் சுமந்து
தென்றலில் அசைந்து
கண்சிமிட்டிச் சிரிக்கிறது
கொடிமீது மல்லிகைப்பூ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நிறம் போர்த்திய
மண் தரை மீதிலே
புன்னகை வீசியபடி
விரைகிறது நீரோட்டம்!

சொற்ப நொடிகளில்
இதயத்தை திருடிக்
காற்றைக் கிழித்து வந்து
மரக்கிளையமருது குருவி!

குளிர் உடல் மேவிய
ஆனந்த மழையிலே
முற்றும் நனைகிறேன்
இன்பத்தின் மிகுதியால்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றூதும் நீர்க்குழாய்கள்

வரண்டு கிடக்கும்
வயல் நிலங்களும்
வற்றிப் போயிருக்கும்
நீரோடும் கால்வாய்களும்!

குன்றும் குழியுமாக
குளங்களும் ஏரிகளும்
நீருக்காய்த் தவமிருக்கும்
வெற்றுக் கிணறுகளும்!

மழையை எதிர்பார்த்துச்
சருகாகும் கிராமங்களும்
நாவரண்டு மரணிக்கும்
வையத்து உயிரிகளும்!

எல்லாமே மனிதனின்
அழிவிற்கான அறிகுறியே
இயற்கையை அழித்ததால்
நிகழ்ந்திட்ட விபரீதங்களே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளை அழித்து
கட்டிடங்களை உயர்த்தி
செயற்கையைப் புகுத்திக்
காலநிலையைச் சிதைத்தான்!

தொழிற்சாலைகள் அமைத்து
தொழிநுட்பத்தை நிறைத்து
ஆரோக்கிய கிராமத்தை
அழிவின் நகரமாக்கினான்!

நிலத்தடி நீரையெல்லாம்
இயந்திரங்களால் உறிஞ்சி
வெப்பத்தின் அகோரத்தில்
உயிர்வாழத் திணறுகிறான்!

இன்று குடிநீர்த் தாங்கிகளின்
வரவுக்காகக் காத்திருந்து
காற்றூதும் நீர்க்குழாய்களால்
ஏமாற்றத்தை நிரப்புகிறான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் மிதிவண்டி

ஒய்யாரமாக ஓர் ஊர்வலம்
பாடசாலை போகையிலும்
வருகையிலும் தினம் நிகழும்

தெருவெல்லாம் சொர்க்கமாக
புதினங்களை ரசித்துக் கொண்டு

மிட்டாயும் வாய்க்குள் இனிக்க
சங்கதிகள் பல பேசிக்கொண்டு
உல்லாசப் பயணம் நடக்கும்

ஊரையே சுற்றி வரும் தேர்வலம்
அது மனதோடு மழைக்காலம்

மீண்டும் கிடைக்குமா அந்த
இன்பத்தின் இளவேனிற் தருணம்?

ஊர்க் கோயில் திருவிழாவும்
உறவுகள் வீட்டுப் பெரு விழாவும்
அக்கம் பக்கப் பயணங்களும்

சாயங்காலக் கடற்கரைக் காற்றும்
விடுமுறை நாளில் அங்காடியும்
மகிழ்வோடு கண்டு ரசிப்பதெல்லாம்
அப்பாவின் மிதிவண்டியில் தான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தரும் மரங்கள்

குடையை மறந்த மழைப்பொழுதில்
சாலை ஓரக் குடையானாய்!
வாட்டுகின்ற வெப்பத்திலே
இளைப்பாற நிழலானாய்!

பூமியின் பசுமை தனை
உயிர்ப்பிக்கும் மகத்துவமே!
காலநிலையை சீரமைக்கும்
காலத்தின் தேவை நீயே!

கோடையின் நாட்களிலே
உனைக் கடந்து செல்பவர் யார்?
மாரி மழை தவறிப் போனால்
உனதருமை பேசாதார் யார்?

உணவு தந்து உடையும் தந்து
உடமை தந்து உறையுள் தந்து
ஆரோக்கிய வாழ்க்கை தந்து
அரு மருந்தாய் அமைந்த தருவே!

நீயில்லா வையத்திலோர்
உயிர் கூட வாழ்ந்திடுமா?
உனை அழித்து வாழும் மாந்தர்
சந்ததி தழைப்பது சாத்தியமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுதிர் காலம்

கண்ணீரால் நிரம்பியிருக்கிறது
ஒரு பெருங்காட்டு நேசம்

ஓவியம் ஏந்திய காகிதம் ஒன்று
கசக்கி எறியப்பட்டிருக்கிறது
அநாதரவாகத் தெருவினிலே

இளவேனிற் காலக்
கவிதைகள் எல்லாம்
பொருளற்றுக் கிடக்கின்றன

வைகறை வானின்
புலர்வுகள் எல்லாம்
வண்ணம் இழந்துபோயின

பனிக்கால மேகங்களும்
வலிகளால் நிரம்பியிருக்கின்றன

பருவ காலங்களில்
மேலுமோர் கனவுதிர் காலம்
இணைந்தாகிவிட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் ஏமாற்றத்தின்
பின்னரான துயர நிறைவு இது

நிலாக்கால ஒளிகள் கூட
ஒய்வெடுக்காத இருட்டறை தான்
இப்போது இந்த உள்ளக்கிடக்கை

அடுக்கி வைத்த
கனவுகள் எல்லாம்
சாம்பலாகிப் போன பின்னாளில்
காத்துக் கிடக்கிறேன்
கனவுகளிற்கு நிறம் தீட்டுவதற்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நாழிகையின் கதறல்

சில மணி நேரம்
கதறி அழுதிருக்கிறது
இந்த வானம்

பருவம் தவறி வந்த
பரிதாப மேகத்தின்
கண்ணீர் இது

நின்று நிதானித்து
பொறுமை காத்து
மண்ணோடு உறவாட
வலுவில்லை அதற்கு

ஊராரும் உறவுகளும்
கூவி அழைத்தும்
வேள்வி புரிந்தும்
யாகத்தீ எரித்தும்

வழிபாடு எடுத்தும்
வலுக்கட்டாயம் செய்தும்
வர மறுத்ததல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது
கதறி அழுதிருக்கிறது

இந்த நாழிகை
புரிந்ததா மானிடா?

மரங்களை வெட்டினாய்
நகரமயமாக்கினாய்
இயற்கையை அழித்து
செயற்கையைப் புகுத்தினாய்

விண்ணுக்கும் மண்ணுக்கும்
தொடர்பைத் துண்டித்து
வானுயரும் கட்டடங்களில்
வாழ்வியலைத் தேடுகிறாய்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் பிரசவம்

மௌனக் கதகதப்பில்
என் தேடல் மெல்லப்
பசியாற்றிக் கொண்டிருக்கிறது!

அறிவு விருட்சத்தின்
நாற்று ஒன்று இங்கே
உயிர் பெறத் தயாராகிறது!

அறியாமையின்
புதைகுழி விட்டு
சிந்தனை காற்றிலேறி
இறக்கை கட்டிப் பறக்கிறது!

உலக அமைதிக்கும்
ஆத்ம தேடலுக்கும்
மெய்ஞ்ஞான விருத்திக்குமான
ஒற்றையடிப் பாதை
இங்கேதான் மறைந்திருக்கிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்ம விடுதலைக்கான
புதிய சமன்பாடு
புலன்களுக்குப் புலப்பட
நிறையவே வாய்ப்பிருக்கிறது!

மிக நீண்ட தூரம்
பயணித்தாக வேண்டும்
பயணங்கள் நீள நீள
உணர்வுகள் உன்னதமடைகிறது!

ஆம் இப்போது நான்
ஒவ்வொரு பக்கத்திற்குள்ளும்
மூழ்கி எழுகின்றேன்
ஒவ்வொரு அத்தியாயங்களாக
தொலைந்து மீள்கின்றேன்

ஒவ்வொரு நூல்களும் என்னை
மீளவும் பிரசவித்து விடுகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கவிஞரின் பிற கவிதை நூல்கள்

*அழகோவியம் (மின்னூல்) - 2017*
*பொற்கனவு - 2018*
*நிலா நாழிகை - 2018*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து இலக்கியப்பரப்பில் தமிழின் மீது மாறாத பற்றோடும், நேசிப்போடும் தனது தனித்துவமான கவிதைகளையும் ஆக்கங்களையும் படைத்து, மக்கள் மனதில் தனக்கான தனியிடத்தைத் தக்க வைத்துப் பயணித்துக் கொண்டிருக்கும் நற்றமிழ் மகனே தம்பி பாலசுந்தரம் ரஜிந்தன். இவர் பற்றி நான் அறிந்தவரை, இலங்கையின் யாழ்ப்பாணத்தில் வேலணை எனும் ஊரில் பாலசுந்தரம் கமலேஸ்வரி தம்பதியின் மூத்த மகனாகப் பிறந்து க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் "கற்பித்தலில் தேசிய டிப்ளோமா" கற்கையினைப் பூர்த்தி செய்து ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். நடிப்பு, பேச்சு, பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற பல்துறை களிலும் ஆளுமை மிக்கவர். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, இணையம், மின்நூல், முகநூல் எனப் பல்வேறுபட்ட தளங்களிலும் கவிதைகளைப் படைத்து வருவதுடன் இந்திய, இலங்கைக் கவிதைக் குழுமங்களில் கவிச்சிகரம், கவிச்சிற்பி, கவித் தீபம், இசைக்கவி, கவித்தாமரை, இளங்கவி விருது, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் விருது போன்ற விருதுகளையும் வேலணை பிரதேச கலாசாரப் பேரவையின் 2019 ஆம் ஆண்டிற்கான இளங்கலைஞர் விருதினையும் பெற்றிருக்கிறார். 2017 ஆம் ஆண்டு அழகோவியம் மின்னூலையும், 2018 ஆம் ஆண்டு பொற்கனவு, நிலா நாழிகை என்கின்ற கவிதை நூல்களையும் வெளியீடு செய்துள்ளார். இவரின் மூன்றாவது கவிதைத் தொகுப்பே "கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்" எனும் இந்நூலாகும். ஒரு இளைஞனாக இன்றைய நடைமுறை வாழ்க்கை பற்றிய விரிவடைந்த சிந்தனைகளுடன் ஆக்கபூர்வமான பல கருத்துக்களையும் தொட்டு எழுதப்பட்ட இத்தகைய படைப்புகள் வருங் காலத்தில் "ஒரு குறிப்பிட்ட காலத்து வாழ்வியலின் ஆவணச்சாட்சியங் களாய்" அமைந்துவிடும். தம்பி ரஜிந்தனின் இந்த வெளியீடும் மிகுந்த வெற்றி பெற்று காலத்தால் நிலைத்து நிற்க வாழ்த்தி மகிழ்கின்றேன்.

நன்றி

திருமதி அனுசுயா ஆனந்தரூபன்
பிரான்ஸ் 'தமிழ் விருட்சம்' அமைப்பாளர்.
இதழ் இலத்திரனியல் ஊடக இயக்குநர்.

Rs.300/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org